# 15. இறை தந்தையை ஆராதிப்போம்



"நேற்று ஞாயிற்றுக் கிழமை. பூசைக்குப் போனீர்களா"?என்று ஆசிரியர் கேட்டார்.சாந்தி, நிமல், அருள், மேரி ஆகியோர் கைகளை உயர்த்தினார்கள். நல்லது. நிமல் நீங்கள் எவ்வாறு கோயிலுக்குப் போனீர்கள்? கோயில் மணி அடித்தது. அம்மா, அப்பா, அண்ணா, தங்கை, நான் எல்லோருமாகக் கோயிலுக்குப் போக ஆயத்தமானோம். நான் பூசை முடிந்தபின் மறைக்கல்வி வகுப்பிற்குப் போவதற்குப் புத்தகங்களை யும் எடுத்துக் கொண்டேன்.

பக்கத்து வீட்டு வசந்தி மாமி, அருளையும் ராதாவையும் அழைத்துக் கொண்டு பூசைக்குப் போவதற்காக எங்களுடைய வீட்டிற்கு வந்தார். கோயிலுக்குப் போகும் வழியில் அன்ரனி மாமா, மேரி மாமி, ஜோண் அண்ணா, ஜேன் அக்கா ஆகியோரும் எங்களோடு சேர்ந்து வந்தார்கள்.

நாங்கள் எல்லோரும்
கோயிலுக்குப் போனோம்.

தேவாலயத்துள் சென்று முளந்தாளிட்டு ஆராதனை செய்தோம். எலலோரும் முழந்தாளிலிருந்து கரம் குவித்து இறை தந்தையை ஆராதித்தார்கள். கீதங்கள் பாடினார்கள். பூசை முடிந்தது. நாங்கள் மீண்டும் தந்தையை அராதித்துத் தேவாலயத்திலிருந்து வெளியே வந்தோம். நாங்கள் அனைவரும் ஒன்று கூடி இறை தந்தையோடு உரையாடியதால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

